# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# CC. No.1201/2022 P.W.5

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | முத்துக்குமார் | த-பெ | காந்தி |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 50/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | மூப்பு உதவி மருத்துவர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **23.06.2026**

**எதிரி ஆஜர் இல்லை மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

--------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து மூப்பு உதவி மருத்துவராக காரைக்குடி அரசு மருத்துவமனையில் பணி செய்து வருகிறேன். 21.12.2019 அன்று நான் பணியில் இருந்த போது காலை 11.30 மணிக்கு அண்ணாமலை என்பவர் மனைவி ராதா என்பவர் சிகிச்சைக்காக வந்தார். அவரை புற நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்த போது அவரை அன்றைய தினம் காலை 10.30 மணியளவில் குட்செட் தெருவில் வைத்து செந்தில் என்ற அடையாளம் தெரிந்த நபர் கம்பியை கொண்டு வலது முழங்கையில் கையில் தாக்கியதாக சொன்னார். அவரை பரிசோதனை செய்த போது அவருக்கு வெளிக்காயங்கள் எதுவும் தென்படவில்லை. மேற்படி சொன்ன வலது முழங்கையில் லேசான வலி இருந்தது கண்டறியப்பட்டது. உடல் முழுவதும் ஊமைக்காயங்கள் தென்பட்டது. மேலும் அந்த நபருக்கு ஏற்பட்ட காயமானது சாதாரண வகையை சேர்ந்த என்று நான் சான்று அளித்தேன். நான் வழங்கிய **காய சான்று அ.சா.ஆ..** வழக்கு சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை**

வலது முழங்கையில் லேசான வலி காயம் ஏப்படி கண்டறியப்பட்டது என்றால் அழுத்தும் போது வலி இருந்ததா சொன்னார் மேலும் வீக்கம் இருந்தது. தானாக கீழே விழுந்து மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் உள்ளது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.06.24 11:00:06 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.